**காலி மரபுரிமை மன்றம் - 2019**

**----------------------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

--------------------------

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

-------------------------------------------------

காலி மரபுரிமை மன்றத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து காலி மரபுரிமை மன்றத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---------------------------------------------------------------------------------

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------
-

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, காலி மரபுரிமை மன்றம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது காலி மரபுரிமை மன்றத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால்

செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மன்றத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் காலி மரபுரிமை மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு மன்றம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு மன்றத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காலி மரபுரிமை மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- காலி மரபுரிமை மன்றத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- காலி மரபுரிமை மன்றத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் காலி மரபுரிமை மன்றம் இணங்கியிருந்ததா என்பதும்,

- காலி மரபுரிமை மன்றம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- காலி மரபுரிமை மன்றத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல்

வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை "திட்டமிட்டு பேணுதல்" நிறுவகத்திற்கு அவசியமாக உள்ளது. பொதுப் பேரேடு, நாட்குறிப்புக்கள் மற்றும் நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் போன்ற பிரதான கணக்கீட்டுப் பதிவேடுகளை பேணுவது தொடர்பான விடயங்கள் இத்தலைப்பின் கீழ் உள்ளடக்கப்படலாம்.

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது ரூபா 1,374,265 பெறுமதியான கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக அவதானிக்கப்பட்ட மாற்றங்களை இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் அக் கொடுக்கல்வாங்கல்கள் திரண்ட நிதியத்திற்கு பதிவளிக்கப்பட்டிருந்தது. | திரண்ட நிதியத்திலிருந்து கொடுக்கல் வாங்கல்கள் பதிவளிக்கப்பட்டிருக்கவில்லை. | கொடுக்கல் வாங்கல்களை பரீட்சிப்பதற்கும் திரண்ட நிதியத்திலிருந்து கொடுக்கல் வாங்கல்களை பதிவளிப்பு செய்வதற்கு முனனர் மாற்றங்களை இணக்கம் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் குறிப்பிடப்பட்ட ரூபா 1,027,911 பிடித்துவைத்தல் மீதிக்குரிய விபரமான ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பொதுப் பேரேட்டில் விபரமான குறிப்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | நடைமுறைச் சொத்துக்களின் கீழ் மீதிகளிற்குரிய விபரமான ஆவணங்கள் நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டிற்கான பணிக்கொடை ஒதுக்கீடு நிதிக்கூற்றுக்களில் ரூபா 605,916 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்ததால் மீளாய்வாண்டிற்கான மிகை நிதிக்கூற்றுக்களில் அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | பணிக்கொடை ஒதுக்கீடு குறைத்துக் காட்டப்பட்டமையை சீர்செய்வதற்கான ஒழுங்குகளை நான் மேற்கொள்வேன். | பணிக்கொடைக்காக சரியான பெறுமதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | காசுப்பாய்ச்சல் கூற்றின் நிதி நடவடிக்கைகளின் கீழ் | பதில்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | சரியான மீதிகளை கணக்கீடு செய்வதற்கு |

| | |
|---|---|
| அமைச்சிடமிருந்து பெறப்பட்ட மானியங்கள் ரூபா 800,732 ஆல் குறைத்தக் காட்டப்பட்டிருந்ததுடன் ஊழியர் கடன்கள் ரூபா 122,777 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்கான ஆவணச்சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை

| விடயம் | தொகை ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| நிலையான சொத்துக்கள் | 40,900,661 | (i) நிலையான சொத்து மெய்மையாய்வு அறிக்கைகள்<br>(ii) நாளதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடுகள் | எதிர்காலத்தில் உங்களுக்கு தேவையான தகவல்களை சமர்ப்பிப்பதற்கு எங்களால் நடவடிக்கை எடுக்கப்படும் | நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட்ட நடைமுறையல்லாச் சொத்துக்களின் மீதிகளிற்குரிய நாளதுவரையாக்கப்பட்ட சரியான பதிவேடுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் |
| இருப்பு | 792,865 | (i) இருப்பு அறிக்கைகள் மற்றும் பொருள் மெய்மையாய்வு சபைகள்<br>(ii) நாளதுவரையாக்கப்பட்ட பெருளிருப்பு பதிவேடு | - மேற்படி - | இருப்பு மீதி தொடர்பான பொருளிருப்பு பதிவேடு மற்றும் பொருள் மெய்மையாய்வு அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வின் போது பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 756 | வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வரிசை அமைச்சின் வழிகாட்டலின் கீழ் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு 2020 மார்ச் மாதத்தில் நடாத்தப்பட்டது. | நிதிப் பிரமாணங்களிற்கு இணங்க வருடாந்த பொருள் மெய்மையாய்வை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பந்தியின் பிரகாரம் | காலண்டு ரீதியாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | 2003.06.02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டும் என்பது ஏற்றுக்கொள்ளப்படுகின்றதுடன் மன்றம் செயற்பட்டு வருகின்ற வரிசை அமைச்சின் கீழ் நடாத்தப்பட்ட கூட்டங்களில் காலி மரபுரிமை மன்றம் முறையாக கலந்துகொண்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டும். |
| (இ) | 1994 இன் 07 ஆம் இலக்க காலி மரபுரிமை மன்ற சட்டத்தின் 16 ஆம் பிரிவு | முன்னைய ஆண்டின் வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் அட்டவணைப்படுத்தப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | செயலாற்றல் அறிக்கை உரிய திகதியில் தயாரிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 3,956,108 மிகையொன்றாக காணப்பட்டதுடன் இதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 223,182 ஆக காணப்பட்டமையால் முன்னைய ஆண்டின் நிதி விளைவுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 4,179,290 அல்லது 1873 சதவீத முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | காலி மரபுரிமை மன்றத்திற்காக புதிய வலைத்தளமொன்றை உருவாக்குவதற்கு ரூபா 300,000 தொகைக்கு வழங்குநரொருவர் தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் 2018 ஆம் ஆண்டில் ரூபா 224,250 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டில் ரூபா 273,515 தொகை செலுத்தப்பட்டிருந்தது. ரூபா 300,000 தொகைக்கு வலைத்தளத்தை | 2019 ஆம் ஆண்டின் திசெம்பர் மாத ஆரம்பத்தில் வலைத்தள வடிவமைப்பு வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் “இலங்கை கணக்கீட்டு நியம இல. (எல்கேஏஎஸ்) 38 – கற்பனைச் சொத்துக்கள்” இன் கீழ் நிறுத்தி வைக்கப்பட்ட தொகைகளை விடுவித்த | இணங்கப்பட்ட தொகையை விஞ்சி கொடுப்பனவு செய்வதற்கு அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உருவாக்குவதற்கு இணங்கப்பட்டிருந்த போதிலும் 2019 திசெம்பர் 31 அளவில் அங்கீகாரமின்றி ரூபா 497,765 தொகை செலுத்தப்பட்டிருந்தது. வலைத்தளத்தை உருவாக்கும் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன் ரூபா 197,765 தொகை கொள்வனவு பெறுமதியை விஞ்சி மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | பின்னர் மொத்தக் கிரயத்தை கணக்கீடு செய்வதற்கு முன்மொழியப்பட்டிருந்தது. | |
| (ஆ) | காலி கோட்டையிலுள்ள கபா (Kafa) மலசலகூட முறைமையின் கட்டிடக்கலை பெறுமதிக்கு ஏற்றதாக மலசலகூட முறைமையை நவீனமயப்படுத்துவதற்காக அது ரூபா 6,932,275 ஒப்பந்த தொகைக்கு 2019 மார்ச் 21 இல் ஒப்பந்ததாரர் ஒருவரிற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிர்மாண வேலை 2019 மார்ச் 25 இல் ஆரம்பிக்கப்பட்டு 2019 ஆகஸ்ட் 26 இல் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. எனினும் நிர்மாண வேலை 2020 சனவரி இறுதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன் சமர்ப்பிக்கப்பட்ட விலைப்பட்டியல்களிற்காக ரூபா 4,348,387 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | செயற்திட்டத்திற்கான மதிப்பீடுகளை தயாரிப்பதற்கு குறித்துரைத்த நிறுவனம் அல்லது தனிநபரை மன்றம் கொண்டிருக்காததால் 2017 ஆம் ஆண்டின் கடைசி காலாண்டில் இவ் இலக்கை காலி மரபுரிமை மன்றத்தால் எதிர்கொள்ள முடியாதிருந்தது. இக் காரணத்தினால் முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு இந் நிர்மாணத்திற்கான மதியுரையாளராக சீஈசீபீ இன் கரபிட்டிய கிளை தெரிவு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க அவர்கள் உரிய கேள்வி ஆவணங்களை தயாரித்து 2018 மார்ச் 08 இல் அவற்றை சமர்ப்பித்தது. நாங்கள் பெறுகை செயன்முறையை 2018 மார்ச் 09 இல் ஆரம்பித்து ஒப்பந்ததாரர் ஒருவரை தெரிவுசெய்திருந்தோம். செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துவதில் தாமதம் காணப்பட்டதுடன் பல தடவைகள் பல வரிசை அமைச்சுக்களிற்கு காலி மரபுரிமை மன்றம் மாற்றப்பட்டமை இத் தாமதத்திற்கான காரணங்களில் ஒன்றாகும். | உரிய காலத்தில் உரிய வேலையை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | காலி மரபுரிமை மன்றத்திற்கு தேவையான அதிகாரங்களை பெற்றுக்கொள்வதற்கும் மன்றத்திற்கான | காலி மரபுரிமை மன்றம் பல தடவைகள் வெவ்வேறு வரிசை அமைச்சுக்களின் கீழ் காணப்பட்டதுடன் | திருத்தப்பட்ட அதிகாரச்சட்டத்தை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வருமானமீட்டலை அதிகரிப்பதற்கும் 1994 இன் 7 ஆம் இலக்க காலி மரபுரிமை மன்ற அதிகாரச்சட்டத்தை திருத்தம் செய்வதற்கான தேவை இனங்காணப்பட்டு 2015 ஆம் ஆண்டில் அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று தயாரிக்கப்பட்ட போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரையிலும் அதிகாரச்சட்டத்திற்கான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | விளையாட்டுத்துறை அமைச்சின் கீழும் மன்றம் காணப்பட்டது. ஆகையால் அதிகாரச்சட்டத்திற்கான திருத்தங்களை மேற்கொள்ளும் வேலை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட முடியாதிருந்தது. எனினும் தற்போதைய அமைச்சின் கீழும் இப் பணியை நிறைவேற்றுவதற்கு நான் எதிர்பார்க்கின்றேன். | |

**3.2 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2016 ஆம் ஆண்டில் ரூபா 1,520,000 கிரயத்தில் 16 canvases தீந்தை பூசப்பட்டிருந்ததுடன் காலி கோட்டையின் Moon காவல் கோபுரத்திலுள்ள டச்சு போர் அறையை பாதுகாப்பதற்கும் காலி வரலாற்று பாரம்பரியத்தை பிரதிபலிக்கும் கண்காட்சி கலைக்கூடமாக அதனை மாற்றுவதற்கும் ஓவியங்கள் பெறப்பட்ட போதிலும் அப் பணி நிறைவேற்றப்படாமல் அவ் ஓவியங்கள் அறிக்கைத் திகதி வரையான 6 ஆண்டுகளிற்கு மேலாக மன்ற அலுவலக வளாகத்தில் விளைவற்றுக் காணப்பட்டன. | Moon காவல் கோபுரம் தவிர்ந்த அனைத்து காவல் கோபுரங்களும் உலக வங்கி உதவியளிக்கும் செயற்திட்டங்களின் கீழ் சுற்றுலாப்பயணிகளிற்கு அனுபவங்களை பெற்றுக்கொள்வதற்காக பல்வேறு கலைக்காட்சிக் கூடங்கள் மற்றும் அருங்காட்சியகங்களிற்கு மாற்றப்படும். அத்துடன் சிறுவர்களிற்கான சிறப்பு கலைக்காட்சி கூடமாக Moon Battle அறையை உருவாக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது. அதற்கிணங்க கலைக்காட்சிக் கூடத்தின் ஆரம்ப கருப்பொருள் திருத்தம் செய்யப்பட்டது. அதன் பிரகாரம் 16 ஓவியங்கள் மற்றும் 12 சிலைகளிற்குரிய வரலாற்று தொடர்கள் மேலும் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றதுடன் காட்டூன் விளக்க ஓவியங்கள் சிறுவர்களை மேலும் கவர்ந்திழுப்பதற்கு சேர்க்கப்பட்டு | குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களிற்காக செலவிடுவதன் மூலம் பணத்தை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வருகின்றன. அதே போல் உலக வங்கி செயற்திட்டங்களின் கீழ் கலைக்காட்சி கூடத்தின் சில வேலைகளை மேற்கொள்வதற்கு பட்டியலிடப்படுகின்றது. | |
| (ஆ) | இரண்டு வளிப்பதனாக்கிகளை நிறுவுவதற்காகவும் மின்னிணைப்பு வரிசைகளை மறைப்பதற்கு மரத்தினாலான சட்டங்களை பொருத்துவதற்கும் 2015 ஆம் ஆண்டில் ரூபா 1,013,005 கூட்டுமொத்த தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2020 யூன் 15 வரையிலும் இவ் அறையில் வேலை பூர்த்தி செய்யப்படாததன் காரணமாக இயந்திரங்கள் தற்போதும் விளைவற்றுக் காணப்படுகின்றன. | வளிப்பதனாக்கிகள் இப் போர் அறையில் பல்வேறு கண்காட்சிகளிற்காகவும் பிரயாணிகளிற்காக இவ் அறையை நாளாந்தம் திறக்கும் போதும் பயன்படுத்தப்படுகின்றன. ஆபிரிக்க அடிமைகள் பற்றிய வரலாற்றுத் தகவல்களை கொண்டுள்ள கண்காட்சி கலைக்கூடமொன்றை தற்காலிகமாக வைப்பதற்கும் இவ் அறை பயன்படுத்தப்பட்டது. கொவிட்-19 காலப்பகுதியின் போது கலைக்காட்சிக் கூடத்தை மூடியதன் காரணமாக வளிப்பதனாக்கிகளில் ஒன்று செயற்படாது இருந்திருக்கலாம் என்பது எங்களது அபிப்பிராயமாகும். அடுத்த சில மாதங்களில் இக் கலைக்காட்சிக் கூடத்தின் வேலையை பூர்த்தி செய்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. கலைக்காட்சிக் கூடம் திறக்கப்படும் போது பதினாறு (16) canvas ஓவியங்களும் சிறுவர்களின் ஓவியங்களுடன் காட்சிப்படுத்தப்படும். | அறையிலுள்ள வேலைகளை பூர்த்தி செய்வதற்கும் வளிப்பதனாக்கிகளை பயன்படுத்துவதற்கும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர், நிர்வாக உத்தியோகத்தர், 06 செயற்திட்ட உதவியாளர்கள் மற்றும் 02 பாதுகாப்பு உத்தியோகத்தர் பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும் அவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 1994 இன் 07 ஆம் இலக்க காலி மரபுரிமை மன்ற அதிகாரச்சட்டத்தின் கீழ் காலி மரபுரிமை மன்றத்தை ஸ்தாபித்ததிலிருந்து 15 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் 2006 சனவரி 02 இலிருந்து அமுலுக்கு வரும் வகையில் ஒப்பந்த அடிப்படையில் நிர்வாக உத்தியோகத்தர் பதவிக்கு பெண் உத்தியோகத்தர் ஒருவர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்ததுடன் அவர் வருடாந்தம் ஒப்பந்த காலப்பகுதியை நீடிப்பதன் மூலம் 14 ஆண்டுகளிற்கு மேலாக அப் பதவியில் பணியாற்றியிருந்தார். | பணிப்பாளர் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் பதவிகளிற்கு நிரந்தரமாக உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் உங்களிற்கு தெரிவிக்க விரும்புகின்றேன். 06 செயற்திட்ட உதவியாளர் பதவிகளில் 04 பதவிகளிற்கு வரிசை அமைச்சிலிருந்து உத்தியோகத்தாகள் எற்கனவே ஒதுக்கப்பட்டுள்ளனர். எதிர்கால தேவைப்பாடுகளின் பிரகாரம் செயற்திட்ட உதவியாளர் மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர் பதவிகளிற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வெற்றிடங்களை முறையாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |